

புதினப்பத்திரிகையாகப்
DUPLICATE
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிஞு (1889)
ஆவணிமீ" உஉஉ
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஞு 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞு ஆவணிமீ" ககஉ (ககூஉ௩ ஆகஸ்ட்டு உஎ) திங்கட்கிழமை. { இலக்கம்—கசு.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

யாழ்ப்பாணம்

சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற

புத்தக விளம்பரம்.

	ரூ. ச.
முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது)	க0
இரண்டாம் பாலபாடம் ,,	கடு
மூன்றும் பாலபாடம் ,,	உ0
நான்காம் பாலபாடம்	ரு0
ஐந்தாம் பாலபாடம்	ச0
ஆறும் பாலபாடம்	௬0
கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிபிக்கற்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது. விளக்கத்துடன்	எடு
கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்)	ரு0
கிருட்டிணன் றூது, உரையுடன்	அடு
நமச்சிவாயமாலை, உரையுடன்...	ரு
ஆத்திசூடி	ரு
வெற்றிவேற்கையுரை	ரு
வாக்குண்டாமுரை	ரு
நல்வழியுரை	ரு
நன்னெறியுரை	ரு
இனியவை நாற்பதுரை (ஆங்கிள மொழிபெயர்ப்புடன்)...	கஉ
இலக்கண வினவிடை...	க0
நிகண்டு கக-வதும் கஉ-வதும் ...	உடு
திருவாதவூரடிகள்புராண மூலம் ...	உடு
திருச்செந்தூர்ப்புராணவுரை	
கிளேஸ்காகிதம்	க-உடு
றவ்காகிதம்...	க-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன்	க0
கந்தசஷ்டி கவசம்	ரு
சுப்பிரமணியசுவாமி விருத்தம் ...	ரு
ஆறுமுகசுவாமி விருத்தம்... ...	ரு
பிள்ளையார்கதை	கஉ
கதிரைமலைப் பேரின்பக்காதல் ...	கஉ
பிரபஞ்சப் பெருவழக்கு	க0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்?	க0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு)	சு
குமணசரித்திரம் ,,	சு
பஞ்சரத்தினத் திருப்புகழ்	ரு
சோமவாரவிரதமான்மியம்...	க0
கந்தவிரதமான்மியம்	க0
சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது...	கடு
மறைசையந்தாதி	உ0

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றானியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

[ESTABLISHED 1909].

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவதலையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

உத்திரவாதமுள்ளது.

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாஇன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஒளஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இல்லை. பினாங்கு, சிங்கப்பூர், கொளும், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொனறுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமைப்பணத்தை கொடுபடாவிட்டால் கோர்ட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனதியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை தென்னுற்காடு ஜில்லா.

(Y. 19).

விளம்பரம்.

கல்லூர்பஸ்பம்:—1890ஞு தொடங்கி நாளது வரையில் அநேகமாயிரம்ஜனங்களுக்கு கைவல்லியமாகிய இந்த கல்லூர்பஸ்பம் பல்லில்பீருகட்டுதல், பீருவளருதல், பீருகுறைதல், பீருகள் வீக்கம், சீழ்வருதல், பல் அசைதல், ஆடல், குத்தல், கடுத்தல், சொற்பகாளாய் இரத்தம்வருதல், வாய்நாற்றம் இவைகளை 2அல்லது3வேளை

M.S. Ambalawanapillai,
GAURO LEVR
Jaffna.

யித் சௌக்கியமாக்கும்; பல் கறுக்காது. இந்த மருந்தினுல் வேறு வியாதிகள் உண்டாகாது; எத்தனை நாள் வைத்திருந்தாலும் கெட்டுப்போகாது; சிறுகுழந்தைமுதல் உபயோகித்துவந்தால் சுகஜன்னியாலுண்டாகும் எவ்விதமான பல்வியாதிகளும் வாராது; பெண்கள் புருஷர்கள்முதலான யாவர்களும் உபயோகப்படுத்தலாம்.

(M. 26.)

காகிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

Telegrams: "APPANNA', BANGALORE CITY'

கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,
பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற
மைசூர் ஊதுவத்திகள்.

ரூ.அ.பை.

பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை 0-12-0
முதல் ரூபா 2-0-0 வரை.
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0
முதல் ரூபா 4-0-0 வரை.
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0
முதல் ரூபா 3-0-0 வரை.
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0
முதல் ரூபா 7-0-0 வரை.
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 5-0-0
முதல் ரூபா 12-0-0 வரை.
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா 1-8-0
முதல் ரூபா 20-0-0 வரை.
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ. 0-4-0
முதல் ரூபா 5-0-0 வரை.
புனுகு தோலா 1க்கு விலை ரூபா 10-0-0
முதல் ரூபா 12-0-0 வரை.
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா 2-0-0
முதல் ரூபா 3-0-0 வரை.

கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12 0·
டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
பஹவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.

ஓட்டோ வாஸனை வெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(INDIA).

(Y. 16.)

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

புஷ்டிக்கு கைகண்ட

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புந் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2.

பிளேக் மாத்திரை.

கூாம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை, பழனி, S. I.

(Q 38)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரிஞு
ஆவணிமீ 11வ திங்கட்கிழமை.

பருத்தியை விருத்திசெய்யவேண்டும்.

எந்த நாட்டில் உணவுக்கும் உடைக்கும் முதற்காரணமாக வுள்ள பொருள் வேண்டிய அளவிற்கு விளைகின்றனவோ, எந்தச் சாதியார் உணவு உடைக்கான பொருள்களை விருத்தி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக விருக்கின்றார்களோ அந்த நாட்டிற்கும் அந்தச் சாதியாருக்கும் பஞ்சம் பசி முதலியவற்றால் யாதும் பயமில்லை யெனலாம். அந்த நாடே செல்வத்தோடு கூடியதாகும்; அந்தச் சாதியாரே சுவதந்திரமுடையவர். பஞ்சம் என்பது அந்நாட்டையும் அச்சாதியினரையும் அணுக அஞ்சும். உண்ணவுணவும் உடுக்கத்துணியுமின்றிச் சங்கடப்படுதலே பஞ்சமாம்.

இலங்கை வாசிகளாகிய நாம் எங்களுணவிற்குரிய பிரதான பொருளாகிய நெல்லையும் உடைக்குரிய பிரதான பொருளாகிய பருத்தியையும் வேண்டிய அளவிற்கு ஆக்கிக்கொள்ளா திருத்தலினாலேயே பஞ்சத்திற்கு அஞ்சுகின்றோம். சில வருடங்களுக்கு முன்னர் இங்கே பஞ்சம் நிகழ்ந்தபோது உணவிற்கும் உடைக்கும் நாங்கள் பட்ட கஷ்டத்தை இப்பொழுது நினைத்தாலும் உள்ளம் நடுங்கும். அவ்வகையான பஞ்சம் இனிமேலும் வாராவண்ணம் நாம் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்வதுடன் எங்கள் உணவிற்குரிய விசேஷ பொருளாகிய நெல்லையும் உடைக்குரிய இன்றியமையாப் பொருளாகிய பருத்தியையும் நமது நாட்டிலே போதிய அளவிற்கு விளைவித்தல்வேண்டும்.

உலகத்திலே பொன் விளையும் நாட்டிலும் பருத்தி விளையும் நாடே செல்வமுடையதென்பதை இக்காலத்தில் அறிவாளிகள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். பொன் வெள்ளியைக் காட்டிலும் பருத்தியினாலே அதிக லாப முண்டாகிறதென அறிவுடையோர் கணக்கிட்டிருக்கின்றார்கள். 1901-ம் ஆண்டிற்கும் 1911-ம் ஆண்டிற்கும் இடையேயுள்ள 10 வருடகாலத்தில் பூமியிலே தோண்டியெடுக்கப்பட்ட பொன் வெள்ளி என்னுமிரு லோகங்களால் ஈட்டப்பட்ட பணம் 10200 லக்ஷம் பவுணாகும். அக்கால வெல்லையுள் பருத்திச் செய்கையினால் ஈட்டிய பணம் 16070 லக்ஷம் பவுணாகும். ஆகவே தங்கம் வெள்ளி வாயிலாக ஈட்டிய பணத்திலும் பருத்தி வாயிலாக ஈட்டிய பணம் 5870 லக்ஷம் பவுண் கூடியதாம்.

நெல்லும் பருத்தியும் விளையக்கூடிய நிலத்தை இந்த இலங்காதேவி பெரிதும் உடையவளாக விருப்ப, அவளது புத்திரர்களாகிய நாங்கள் அந்நிலத்தைப் பண்படுத்தி எங்கள் சீவியத்திற்கு இன்றியமையாப் பொருட்களாகிய இவ்விரண்டையும் வேண்டிய அளவிற்கு விருத்திசெய்ய அறியாது உணவிற்கும் உடைக்கும் அந்நிய நாட்டினர் கையைப் பார்த்துக்கொண்டு பஞ்சம் எப்போது வருமோவெனப் பயந்துகொண்டிருப்பது கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய் தேடி அலைவதுபோ லல்லவா விருக்கின்றது.

நமது முன்னோர்கள்காலத்திலே அவர்கள் தம்மைப் பரிபாலித்துவந்த தமிழ சிங்கள அரசர்களின் பேருதவியைக்கொண்டு நெல்லையும் பருத்தியையும் வேண்டிய அளவிற்கு விருத்திசெய்து வந்தார்கள். பெண்களாயுள்ளவர்கள் தத்தம்வீடுகள்தோறும் இராட்டினம் வைத்து நூல் நூற்றுவந்தார்கள். சேணியரும் வள்ளுவர் குலத்தவரும் கைத்தறி வாயிலாகப் புடைவையை நெசவு செய்துவந்தார்கள். எஞ்சிய பஞ்சை வியாபாரத்தின் பொருட்டு இந்தியாவிற்கு அனுப்பிவந்தார்கள். நமது யாழ்ப்பாணத்திலே பருத்திச் செய்கை முற்காலத்தில் விருத்தியாயிருந்ததென்பதற்குப் பருத்தியடைப்பு என்னும் பெயருடனே ஒரு கிராமம் இப்பொழுது வழங்கப்பட்டுவருதலும், பருத்தி இந்தியாவிற்கு அனுப்பப்பட்டதென்பதற்குத் திருட்டாந்தமாகப் பருத்தித்துறை யென்னுந் துறைமுகம் இப்பொழுது அந்தப் பெயருடனிருப்பதுஞ் சிறந்தசான்றாகும். முற்காலத்தில் நூல் நூற்கும்படி உபயோகிக்கப்பட்ட இராட்டினங்கள் சில இப்பொழுதும் பருத்தித்துறை புலோலி யென்னுமிடங்களிலுள்ள சிற்சில இல்லங்களிற் காணக் கிடக்கின்றன.

ஆனால் இக்காலத்தில் விபரீத மதிகப்பட நம்மவர் பருத்தியை விளைவித்தலை முற்றாக அலட்சியஞ் செய்யத் தலைப்பட்டமையினாலே மருந்துக்குப் பருத்தியிலை கிடைப்பதும் அரிதாயிருக்கின்றது. நெல் பருத்தி என்று சொல்லப்படும் பொருட்களை எந்த நாட்டிலும் விளைவித்தற்கு அந்த நாட்டைப் பரிபாலிக்கும் அரசினருடையசகாயம் வேண்டுமென்பதும் மறுக்கொணா உண்மையாகும். ஆனால் இக்காலத்தில் நம்மைப் பரிபாலிப்போர் அந்நியராதலினால் அவர்களுடைய உதவியை இவ்விஷயமாக நாம் காத்திருக்கவொண்ணாது. அவர்கள் சகாயஞ் செய்தாற் கண்டுகொள்ளவேண்டியதுதான். அதனையொழித்து அரசினருதவி கிட்டவில்லையேயென நாம் வாளாவிருந்தால் அதனால் வரும் பஞ்சம் எங்களைப் பொறுத்ததன்றி அரசினரைப் பொறுத்ததன்று. எங்கள் அரசினரோ பஞ்சம் பசியை உணராதவர்.

இந்த இலங்கையிலே பருத்தி செய்கை பண்ணக்கூடிய நிலம் எங்கெங்குண்டோ அங்கங்கெல்லாம் அதனைத் திருத்திப் பருத்தியை விருத்திபண்ண வேண்டும். தனவந்தர்களா யுள்ளவர்கள் ஒரு சங்கமாகச் சேர்ந்து நிலத்தை வாங்கிப் பருத்திச் செடியை விளைவித்தற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். விவசாயக் கல்விநிபுணர்கள் பருத்தியை விருத்திபண்ணுதற்கான வழிகளைப் போதிக்கும் நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிடவேண்டும் தனித்தனியே ஒவ்வொருவரும் தங்கள் வீட்டு நிலங்களிலும் பரீட்சார்த்தமாகப் பருத்தியை வைத்து உண்டாக்கிப் பார்த்தல்வேண்டும். பருத்தி விளையுமானால், பெண்களாயுள்ளவர்கள் நூல்நூற்றல், வஸ்திரம் நெய்தல் முதலிய தொழில்களைப் பயின்று வீட்டு முயற்சியாக அவற்றைச் செய்து தமக்கும் தம் தேசத்திற்கும் லாபத்தை ஆக்குதல் முடியும். இவ்விஷயமாக இன்னும் சமையம் வாய்க்குந்தோறும் இப்பத்திரிகையில் வெளியிடச் சித்தமாயிருக்கின்றோம். விவசாய நூலறிவுடையோர் பருத்திச் செய்கையைக் குறித்து விரிவாகக் காலந்தோறும் எழுதி இப்பத்திரிகையில்வெளியிடுவரேல் அவர்களிடத்து எஞ்ஞான்றும் நன்றி பாராட்டுவோம்.

ஆன்மவிசாரம்.

(ஓர் பிராமணோத்தம ஸாது எழுதியது.)

(1903. செப்டம்பர்மீ.)

(முற்றொடர்).

மனுடருள்ளே சிலர் நமக்கு நல்லவரெனப்படுவதும், சிலர் தீயவரெனப்படுவதும், பிரபஞ்சத்திலே எந்தப் பொருளாயினுமொன்று நமக்கு நல்லதெனப்படுவதும் தீயதெனப்படுவதும் நமது அஞ்ஞானமாகிய குற்றமே. சர்க்கரை தித்திப்பதும் அதனியற்கை; வேம்பு கசப்பதும் அதனியற்கை. ஆதலின், அவை நல்லன தீயனவெனப்படா. மனுடருள்ளே சிலர் நல்லவராயிருப்பதும் சிலர் தீயவராயிருப்பதும் மலபாக வேறுபாடாதலின் அதுவும் இயற்கையே.

நமக்குள்ள விருப்பு வெறுப்பு என்னும் வேறுபாட்டினாலேதான், நல்லது தீயது என்னும் விகற்பம் தோன்றுவதாயிருக்கிறது. நமக்கு விருப்புக்கிடமா யிருப்பதை நல்லதென்கிறோம்; வெறுப்புக்கிடமானதைத் தீயதென்கிறோம். ஆதலின் விருப்பு வெறுப்பு என்னும் வேறுபாடுள்ள நம்மதே குற்றம்.

நமது மலம் பன்றிக்கினியதா யிருக்கிறது. நமக்கு வெறுப்பதாயிருப்பது பற்றி நாம் அதைக் கெட்டதெனலாகாது. அதுதான் அஞ்ஞானம்.

ஒவ்வொருவரும் தம் அறிவினளவுக்குச் சிறந்தது என்று காணப்பட்டதையே நல்லது என்று முடிவுபண்ணுகிறார்கள், இஃதறியாமையே.

பிதற்றுகிறவன் அதை நல்லதென்கிறான், பேச விஷயம் உண்டாகாதவன் சும்மாவிருப்பது யோக்கியம் என்கிறான்.

பன்றிக்கு மலம் இனியதுபோல, ஆன்மாக்களுக்கு மலபக்குவ பேதப்படி தந்தம் களிப்புக் கேதுவாம் அழுக்காறு பிறற்பழி புறங் குறளை முதலிய அவ்வவை தத்தமக் கினிது.

காமவெறிக்கு மருந்து, பயம். மற்றைக் களிப்புக் கோபம் முதலானவை ஆன்மாவோடு சகசம்போல்வனவாதலின், பயத்தால் தணிவதன்றி, அழியத்தக்கன வல்ல.

ஒருவனுக்குப் பாகற்கா யினியது; மற்றொருவனுக்கு அது ஆகாது. இது யார் குற்றம்? பாகற்காயினது குற்றமா!

அஞ்ஞானத்தின் முதிர்ச்சி சிறுமை. அகங்காரங் கொள்வோர், தம்மைப் பெரியராக மதிக்கின்றனர். அகங்காரம் அஞ்ஞான முதிர்ச்சியாதலின் அது தான் சிறுமை. ஆகவே பெருமையாவது அகங்கார விழப்பே.

பொறுமையும் அதுகாரணமான செயல்களும் பதில் செய்ய இயலாதவனது செயல்கள். பொறுமைப்படுகிறவன் அந்நிலையில் தாழ்ந்தவன். அதை விளைத்தவன் அந்நிலையில் மிக்கவன்.

தனக்குத் தீங்கு செய்தவனை அரசனாவது தெய்வமாவது தண்டிக்கட்டும் என்று நாம் கோருவது, 1-வது பொறுமையாகிய இழிதொழிலாயிருக்கிறது. 2-து தீங்கு செய்தவன் தண்டனைப்படுவது யார் நயத்துக்காக? அவன்றன் நயத்துக்காகவன்றோ. அவன்மேல் இரங்கியா நாம் அவனைத் தண்டனைப்படுத்த வேண்டுகிறோம். தீங்கு செய்தவனை ஈசுரன் தண்டிக்கட்டும் என்று வேண்டுவது நமக்கோர் பெரும் இழிவு.

தனக்குப் பிறன் தீங்குசெய்தானென்று அரசனிடம் முறைப்பாடு வேண்டுகிறவர்கள் யாவரோ அவரெல்லாம் சுதந்திரமில்லாதவர்கள். அவர்களுள் செல்வம் வறுமை யென்பன முதலிய வேறுபாடிருந்தாலும், யாரும் சுதந்திரமில்லாத இந்நிலைமையிற் சமமானவர்களே. ஒன்றற்காகவேனும் அரசனிடம் முறைப்பாடு வேண்டத் தேவைப்படாதவன் எவனோ அவனே மற்றெவர்களிலும் பெரியவன்; சமர்த்தன்.

கேட்டவர்களுக்கு ஒன்றைத் தெரிவிப்பது அவர்கள் நிமித்தமானதாகலின், அது தக்கது. தானாய்ப் பிறரைப் புத்தி போதிக்கவும் கண்டிக்கவும் திருத்தவுமென்று முயல்வதெல்லாம் தன்னயத்துக்காகவே தான் செய்துகொள்வன.

ஒருவன், தன் மனையாளைக் கற்புடையளாயிருக்கத் தெண்டிப்பதெல்லாம் அவன் தனக்காக. அவளுக்காகவாயின், அப்படி யிருக்கத் தெண்டிக்க வேண்டியவள் அவளே. அவள் அப்படிக்குக் கேட்டுக்கொண்டதற்காக இவன் செய்வதாயின், அது, அவளுக்காகவாயிருக்கும்.

துன்பமென்பது தவம்; சுகம் என்பது அவம்.

சிற்றறிவாளர்க்கு, அல்லது சிறுவர்க்கு அடக்கம் பொறுமை பிறர்க்கு இனியரா யொழுகல் முதலான சன்மார்க்கங்களைப் போதித்தால், அது கேட்டமாத்திரமாய் அவர் திருந்துவது இயலாது. இந்த உபதேசத்தைப் பெற்று ஒழுகத்தக்க அனுபவம் வந்த காலந்தான் இது பயன்படும்.

யாருக்காயினும் ஒரு போதனையை, அவர், அது பெற்று ஒழுகத்தக்க பக்குவங் கண்டே போதிக்கவேண்டும்.

ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் மற்றவைகளைத் தாம் அகங்காரத்தால் மீறவேண்டுமென்றே இறுமிக்கொண்டு நிற்கின்றன. ஒவ்வொருவரும் பிறருக்கு அதிகாரமுடைய விஷயத்திலே தாம் அடங்க வேண்டி முடிந்தாலும் தமக்கு அதிகாரமுடைய விஷயத்திலே, தாம் அப்பிறரை அடக்க ஆத்திரங்கொண்டவர்களாயேயிருக்கின்றனர். மனைவி, புருஷனுக்கு மற்றெல்லா விஷயத்தில் அடங்கினும், தனக்கென உரியதான சமயற் காரியம் போல்வன ஏதொன்றிலாவது புருஷனை அடக்கக் காத்திருப்பாள். குருவுக்குச் சிஷனும் இங்ஙனமே.(இவைமுறையன்று)

ஆகவே, எல்லாரும் ஒருவர்மேல் ஒருவர் அகங்காரத்தால்மீறத்தக்கவர்களாயேயிருக்கின்றனர். யார்தாம் முற்றுமறிந்தவர். யார் தாம் ஏதொன்றாயினும் அறியாதவர். ஆகவே, யார் பெரியர்! யார் சிறியர்.

மெய்யுணர்வு கிடைத்தும் அதனை உடன்படவொட்டாமல் மறைப்பதுதான் திரோபவம். திரோபவமாவது பக்குவம் வராத ஆன்மாவுக்கு அது உண்டாங்காறும் போகத்தை உண்மையென மயக்குதல்.

உலகத்திலே யாவரும் அல்லது ஒவ்வொருவரும், தாம் தாம் அறிந்ததேபுத்தி; அதேமுடிவு என்றெண்ணியிருக்கிறார்கள்; தாம் தாம் அறிந்தமட்டு அதுவாகலின், தான் அறிந்தமட்டுக்குமேல் ஏதேனும் உண்டென்று துணிவது இயற்கைக்கு விரோதமான காரியம் கண்ணுள்ளவனுக்குத்தான் காட்சிகள் விளங்கும். அஃதில்லாதவனுக்குக் காட்சியென ஒன்றிருக்கின்றதென அறிவதுண்டாகாது.

(வரும்)

யாழ்ப்பாணத்துப் பெண்களும் தமிழ்க்கல்வியும்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் நடத்தப்பட்ட தனித்தமிழ்ப்பரீக்ஷையிற் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பெண் மாணவர்களின் நாமங்களையும் பரீக்ஷைகளையும் பிறவற்றையும் இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டுள்ளோம். மேற்படி சங்கத்தாரால் நடத்தப்படும் பண்டித பரீக்ஷையில் யாழ்ப்பாணத்துள்ள சிறுமியர் இருவர் அதிதிறமையோடு சித்தியடைந்துள்ளனர். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாரால் முதன்முதற் சென்றவருடம் நடத்தப்பட்ட பரீக்ஷையிலும் ஓர் பெண்மணி சித்தியடைந்திருக்கின்றனர். இவற்றையெல்லாஞ் சிந்திக்குங்கால் யாழ்ப்பாணத்திலே பெண்கள் தமிழ்க்கல்வியை ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்திருக்கின்றனரென்பது நன்கு விளங்கும். சிலகாலமாக அலட்சியஞ் செய்யப்பட்ட நமது செந்தமிழ்ப்பாஷை இக்காலத்தில் நமது நாட்டிலுள்ள சிறுமியரால் கற்கப்பட்டு வருதல் உண்மையான செந்தமிழபிமானிகளெல்லாருக்கும் பேரானந்தத்தைத் தருமன்றோ. பெண்கள் தங்கள் சுவயபாஷையைக் கற்றுவருதலினால் அப்பாஷைக்குரிய சாதியும் தேசமும் சமயமுங் காலகதியில் விருத்தியடைந்துவருமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லையாம். தமிழ்ப்பரீக்ஷைகளிற் சித்தியடைந்திருக்கும் இக்கன்னிகாரத்தினங்களைத் திருட்டாந்தமாகக்கொண்டு இங்குள்ள ஏனைய சிறுமியரும் தமிழை நன்கு பயின்று குறித்த சங்கங்களால் நடத்தப்படும் பரீக்ஷைகளிற் சித்தியடைய முயலுதல் வேண்டும். இக்காலத்தில் மேலைத்தேச நாகரிகம் எங்கள் ஆடவர்சிரோமணிகள் வாயிலாகப் பெண்களிடத்தும் புகுந்துவிட, அதன் பயனாக மேலைத்தேச மாதர்கள் விரும்புஞ் சுவாதீனங்கள் சில தமக்கும் வேண்டுமென்னும் எண்ணம் சிலபெண்பாலாருள்ளத்துக் குடிகொண்டு புறத்தும் புகத் தலைப்பட்டமையினால், குறித்த பரீக்ஷைகளிற் சித்தியடைந்த பெண்மணிகள், தாங்கள், தாங் கற்ற கல்வி தமக்கு மாத்திரமன்றித் தம்மோடொத்த ஏனையபெண்களுக்கும் பயன் படும் வண்ணம், பெண்களாயுள்ளாரின் பண்டைக்கால பழக்கவழக்க ஒழுக்கங்களைப் பத்திரிகை வாயிலாகவும் பிறவாயிலாகவும் எடுத்துவிளக்கி, நவீன நாகரிகத்தை அறவேயகற்றிப் புராதன சீர்திருத்தமுறையை அநுசரிக்கச் செய்தல்வேண்டும். கற்ற இப்பெண்மணிகள் தங்கள் சகோதரிகட்குச் செய்ய வேண்டிய பிரதான கடமை இதுவேயாம்.

சமாசாரம்.

காலநிலை:—இதுகாறும் இடையிடையே இருந்த மழைக்கோலமும் நீங்கிவிட இப்பொழுது சிலதினங்களாகக் கடுமையான வெய்யில் எறிக்கின்றது. விதைமழையின்மையாற் கமக்காரர் வயலைப் பண்படுத்துதல் முதலிய தொழில் செய்ய முடியாமலிருக்கின்றார்கள், சிற்சில கிணறுகளில் ஸ்நானத்திற்குத் தானும் நீரில்லாமற் குறைந்துபோய் விட்டது.

சங்காபிஷேகம்:-வண்ணார்பண்ணை ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோயிலில் நிகழும் ருதிரோத்காரிஞு ஆவணிமீ 14வ (30—8—23) வியாழக்கிழமை பகல் டை பெருமாளுக்கும் ஸ்ரீதேவி பூதேவிக்கும் நவோத்தரசகஸ்திர சங்காபிஷேகமும், அன்றிரவு புட்பவிமான புன்னைவிருக்ஷ கோபிகாஸ்திரீ வஸ்திராபகரண அநுக்கிரக அற்புதக்காட்சித் திருவிழாவும் வண்ணார்பண்ணை ஸ்ரீ சி. சி. சண்முகம்பிள்ளை அவர்களின் உபயமாக நடைபெறுமெனவறியலானோம்.

பஞ்சினருமை:-இவ்வுலகமுழுவதிலும் 1901-1911 வரையில் வழங்கிய பொன், வெள்ளி நாணயங்களிலும், அதேகாலத்தில் பருத்தியினால் வந்த பொருட்டொகை 58 கோடி பவுண்களுக்கு அதிகமாகுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கில இராச்சியம் தன்குலதற்குப் பெரும் அடிப்படையாயுள்ளது பஞ்சென்றே சொல்லலாம். தமது வியாபாரத்தை ஆதரித்து வருவதற்காக உலகமடங்கலுமுள்ள மிலேச்ச சனங்களை அதிக ஆடை உடுத்துவிப்பதற்கேற்ற சூழ்ச்சிகளை அவர் கைக்கொண்டு வருகின்றனர். அவர்களது அப்பாக்கிகளும், ஆகாயஇரதங்களும், பீரங்கிகளும் இவ்வியாபாரத்தின் பொருட்டேயன்றி இருக்கவில்லையென்றுஞ் சொல்லலாம். (இந்து).

புலிவேட்டை:-புலகனுவா என்னுமிடத்தில் அநேக ஆடுமாடுகளைக் கொன்றருந்திவந்த புலி ஒன்று முத்துநாயகமவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது. முத்துநாயகமென்பவர் இரண்டு ஆளையாட்களுடன் வேட்டம் புறப்பட்டு அதிகந்தூரஞ் செல்லாமுன்னர் சில செத்தபிராணிகளின் உடம்பு அழுகி நாறும் கெட்ட நாற்றம் வீசியதை உணர்ந்தார். நாலுபக்கங்களிலும் பார்க்கும்போது புலி ஓர் மாட்டின் பிரேதத்தை உண்பதைக்கண்டு சுட்டனர். குண்டு பிராணியின் முன்னங்காலொன்றிற் பாய்ந்தமையால் உடனே அது இவர்களைநோக்கி வரத்தொடங்கியது. [illegible]ரிருவரும் பயத்தினால் மரத்தில் ஏறிக்கொள்ள முத்துநாயகமவர்கள் இன்னோர் வெடியில் அதனைக் கொன்றுவிட்டனர். அது 9 அடி நீளமுள்ள சிறுத்தைப்புலியாம்.

—டிஜ.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீக்ஷை.

சித்தியடைந்த பெண்மணிகள் சந்மானிக்கப்பெற்றமை.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தாரால் சுன்னாகம் இராமநாத வித்தியாலயப் பெண் மாணவர் பொருட்டு 1920-ம் 21-ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட பெண் மாணவர் உயர் தமிழ்ப் பிரவேச பரீக்ஷையிலும், மதுரைத் தமிழ்ச் சங்க பிரவேச் பண்டிதபரீக்ஷையிலும் சித்தியடைந்த மாணவர்களுக்கு அவர்களுக்குரிய யோக்கியதா பத்திரங்களையும் தங்கப் பதக்கங்களையும் உதவுவதற்காக, இந்த ஆக்கஸ்டு௴ 23-ந் தேதி குறித்த வித்தியாலயத்தில் ஒரு கூட்டம் கூடப்பட்டது. அச்சமையம் ஸேர் இராமநாதனவர்களது பாரியாரும் வித்தியாலயத் தலைவியுமாகிய ஸ்ரீமதி லீலாவதி யம்மாள் அக்கிராசனராகவிருந்து யோக்கியதாபத்திரங்களையும் தங்கப் பதக்கங்களையும் சித்தியடைந்தமாணவர்களுக்குதவினர். 1920-ம்ஆண்டு நிகழ்ந்த பெண் மாணவர் உயர் தமிழ்ப் பிரவேச் பரீக்ஷையில் முதல் வகுப்பிற் சித்தியடைந்தவர்களாகிய ஸ்ரீமதி A M சிவக்கொழுந்தம்மாள், ஸ்ரீமதி பராசத்தி யம்மாள் என்னுமிருவருக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் அனுப்பப்பட்ட யோக்கியதா பத்திரமும் தங்கப் பதக்கமும் அளிக்கப்பட்டன. இப்பரீட்க்ஷையில் இரண்டாம் வகுப்பிற் சித்தியடைந்த ஸ்ரீமதி எஸ் அன்னம்மாள், ஸ்ரீமதி T மனோன்மணியம்மாள் என்னுமிருவருக்கும் யோக்கியதாபத்திரங்கள் உதவப்பட்டன.

1921-ம் ஆண்டு நிகழ்ந்த மதுரைத் தமிழ்ச் சங்க பிரவேச பண்டிதபரீக்ஷையில் முதல் வகுப்பில் விசேஷசித்தியடைந்த ஸ்ரீமதி K. தங்கம்மாளுக்கு யோக்கியதா பத்திரமும் தங்கப் பதக்கமும் உதவப்பட்டன. குறித்த 21-ம் ஆண்டில் நிகழ்ந்த பெண்மாணவர் உயர்தமிழ்ப் பிரவேச பரீக்ஷையில் முதல் வகுப்பிற் சித்தியடைந்த ஸ்ரீமதி C இராசராசேஸ்வரி யம்மாளுக்குயோக்கியதா பத்திரமும் தங்கப் பதக்கமும், 2-ம் வகுப்பிற் சித்தியடைந்த ஸ்ரீமதி N நாகம்மாள் ஸ்ரீமதி K கனகமணியம்மாள் ஸ்ரீமதி M உலகநாயகி யம்மாள் என்னுமிவருக்கு யோக்கியதா பத்திரங்களும் உதவப்பட்டன.

1922-ம் ஆண்டு நிகழ்ந்த கேம்பிரிஜ ஜூனியர் பரீக்ஷையில் சித்தியடைந்த மேற்படி வித்தியாலய மாணவர்களாகிய ஸ்ரீமதி பொ.பூபதியம்மாள் ஸ்ரீமதி மு. கமலாம்பிகை யம்மாள் ஸ்ரீமதி C காசேஸ்வரி யம்மாள் ஸ்ரீமதி ஆ: பரமேஸ்வரி யம்மாள் ஸ்ரீமதி C கண்மணி யம்மாள் ஸ்ரீமதி C கனகாம்பிகை யம்மாள் என்னுமிவர்களுக்கும் கேம்பிரிஜ் சர்வகலாசங்கத்தாரால் அனுப்பப்பட்ட ஜூனியர் சேர்ட்டிவிக்கற் பரீட்சை யோக்கியதா பத்திரங்கள் அச்சமையத்தில் உதவப்பட்டன.

இவர்களுள் ஸ்ரீமதி C இராசராசேஸ்வரியம்மாள் தெல்லிப்பழை பிறக்றர் ஸ்ரீ குமாரசுவாமியவர்களின் புத்திரியாவர். இக்கன்னிகாரத்தினம் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாராற் சென்ற வருடம் நடாத்தப்பட்ட பாலபண்டித பரீக்ஷையிலுஞ் சித்தியடைந்துள்ளனர். ஸ்ரீமதி பராசத்தியம்மாள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தரவகுப்பு ஆசிரியர்களு ளொருவராகிய ஸ்ரீ வி. கதிர்காமு B. A.(லண்டன்) அவர்களின் பாரியாராவர்.

அவ்கானிய துரித முன்னேற்றம்.

சேர்மனிய அரசினர் கருமங்களை கபூலில் கவனிப்பதற்கு ஓர் மந்திரி நியமிக்கப்பட்டிருக்கிறாரென்றும், அது இன்னும் இராசாங்கத்தாரால் வெளிப்படுத்தப்படவில்லையென்றும் அறிகின்றேம்.

அவ்கானிஸ்தான் என்னும் அணிநகர் 'புதிய யப்பான்' எனப் புகழப்படும்வண்ணம் சேர்மனிய இராசீக நிபுணர்களைக்கொண்டு பெருந் திருத்தங்கள் செய்தல்வேண்டுமென அதன் அரசன் பெருமுயற்சி செய்து வருகின்றனன். சேர்மனியர்களுடைய உதவியினால் தேச முன்னேற்றத்துக்கேற்ற சிறந்த முயற்சிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

பெருந் தொகையினரான சேர்மனியர் பல துறைகளிலும் அதிக கவனமாக உழைத்துவருகின்றனர். மின்சாரத் தொழிற பகுதி, கைதேர்ந்த ஓர் சேர்மன் எஞ்சினியரின் தலைமையின் கீழ் நடைபெற்றுவருகின்றது. அமீருக்கு அதி அலங்கார அரண்மனை அமைப்பதற்கும், பிறநாடுகளிலிருந்து அரசாங்க கருமங்களைக் குறித்துப் பேச வரும் பெருமக்கள் தங்கச் சிங்கார மாளிகை எழுப்புவதற்குமாக சேர்மன் சிற்பாசிரியர் மாதிரிப் படம் வரைந்துவருகின்றனர்.

கல்விச் சீர்திருத்த விஷயங்களைக் கவனிப்பதற்கு ஓர் பிரான்சிய விற்பன்னர் நியமனம் பெற்றிருக்கின்றனர். சபாஸ்டியன் பேக் என்னும் ஜேர்மனிய அறிஞர் அயிரோப்பிய சீர்திருத்த முறைகளையும் பிறவற்றையும் எடுத்துக் கூறுவதற்குத் துவிபாஷியாக அவ்கானிஸ்த அரசால் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஐந்து ஆண்களும் இரண்டுபெண்களும் ஆகிய ஏழு மருத்துவ நூல் வல்லார் (Drs) ருஷியா மார்க்கமாக அவ்கானிஸ்டானுக்கு வருகின்றார்களாம். அவ்கானிஸ்தானிலுள்ள இளைஞர் பலர் அயிரோப்பிய நாடுகளுக்குக் கல்விப் பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றார்கள். டபிளினில் மாத்திரம் நாற்பது மாணவர்கள் வரையில் இருக்கிறார்களாம். அவர்களுக்காகப் பிரத்தியேகமான கலாசாலை யொன்று சேர்மனியரால் அமைக்கப்பட்டிருக்கின்றது. கிழக்கு நாடுகளின் நன்னிலையைக் குறித்து சேர்மனியர் அதிக ஊக்கத்துடன் பிரயாசை எடுத்து வருவது கவனிக்கத் தக்கது. அவ்கானிஸ்தானின் ஒவ்வொரு புத்தகக் கடைகளிலும் சிற்பம், வாணிகம், இராசீகம், கைத்தொழில் முதலாம் விஷயங்களைப்பற்றிப் புதிதாக வெளியிடப்பட்ட புத்தகங்கள் நிறைந்துள்ளனவாம். பெரும் போர் கொடுத் திளைத்துக் கிடக்கும் சேர்மனி பிறநாட்டுச் சிற்றரசுகளைச் சிறந்த நிலைக்குக் கொண்டுவர முயல்வது மிகவும் வியக்கத்தக்கதாகும்.

இந்திய சமாசாரம்.

(நமது சொந்த நிருபர் எழுதியது.)

நாகபுரித் தேசியக் கொடியார்ப்பு.

தேசியக்கொடி தாங்கிய சத்தியாக்கிரக வீரர் நூற்றுவர் முன் அரசினரால் தடைப்படுத்தப்பட்ட வீதிகளுக்கூடாக யாதாமோர் எதிர்ப்புமின்றிக் கெம்பீரமாகப் பவனிவந்தனராம். அயிரோப்பியரின் கிளப்புக்கும் இராணுவப் பகுதியார் வாசஞ்செய்யும் மனைகளுக்குப் போகும் மார்க்கங்களுக்கும் இவர்கள் போகாவாறு தடுக்கப்பட்டிருந்தார்களாம். சாத்வீக எதிர்ப்புகளனைத்தும் மறவினைகளைப்போன்று உடனே பயனைக் கொடாவிடினும் ஈற்றில் பெருமகிழ்ச்சிக் கேதுவாகிய வெற்றியை அளிக்குமென்பதற்கு இது தக்க சான்றாகும். இது சம்பந்தமாகச் சிறையிற் செதிக்கப்பட்டார் விரைவில் விடுதலை அடைவா ரென்பதில் ஐயமில்லை.

மகமத் அலி.

மௌலானா மகமத்அலி பிஜாப்பூர் மறியற்கூடத்தினின்றும் இந்தவாரத்தில் விடுதலையாக்கப்படுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. கிலாபத் கூட்டத்தினர் அவரை நான்கு குதிரைகள் பூட்டிய இரதத்தில் பம்பாய்க்குக் கொண்டு போவதாகத் தீர்மானஞ் செய்திருக்கின்றார்கள். அவர் சிறை மீட்சியின்பின்னர் பல கூட்டங்களிற் பிரசங்கமாரி பொழிவாராம். மூன்று நான்கு தினங்களுக்கு முன் விடுதலையாக்கப்படுவாரென வெழுந்த பொய் வதந்தி ஒன்றை நம்பி ஆயிரக்கணக்கான சனங்கள் மறியற்கூடத்தை வளைத்துக் காத்து நின்றனராம். மகமத் அலி அவர்களின் சமூகம் சனங்களிடையே பெரும் உற்சாகத்தை மூட்டி சுயராச்சியக் கிளர்ச்சியைப் பன்மடங் கதிகமாக எழுப்பிவிடுமென நம்பப்படுகின்றது.

மிதவாதிகள் ஒத்துழையாமைக் கட்சியிற் சேர்ந்துகொண்டனர்.

17-ம் காந்தி திருநாட் கொண்டாட்ட தினத்தில் ஒன்றரை வருடச் சிறைவாசஞ் செய்யும் திரு லாலாலஜபதி ராய் என்னும் தேச பக்தரின் கஷ்டங்களைக் குறித்துத் தாமநுதாபப்படுவதாகவும், விரைவில் மீண்டு வந்து தேச தொண்டு புரியுமாறு அவரை இறைவன் அநுக்கிரகிக்குமாறு வேண்டிக்கொள்வதாகவும் தலைவர் சபையிற் கூறினர்.

காந்திஅடிகள் மறியற்கோட்டம் புகுந்ததன் பின் அதிகம் அரசாங்க மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும் கெனியா விஷயமானது திரு சாஸ்திரி திரு சிந்தாமணி முதலியோரை ஒத்துழையாதாருட் சேர்ட்டராக்கிவிட்டது என்று திரு யோட்ச் யோசெப் என்பவர் கூறினர். திரு சிந்தாமணி அவர்கள் பிரசங்கங்களில் அரசாங்கத்தாரைத் தாக்கிவருகின்றனராம்.

யாழ்ப்பாண ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்.

இச்சங்கத்தாரால் நடத்தப்படும் பரீக்ஷைகளுக்கு ஆயத்தஞ்செய்ய விரும்புவோர்க்கும் உயர்தர தமிழ் இலக்கண இலக்கியங் கற்க விரும்பும் ஏனையோர்க்கும் உதவியாக யாழ்ப்பாண நகரில் ஒரு தமிழ் வகுப்பு ஏற்படுத்தித் தக்க பண்டிதர்களைக்கொண்டு தமிழ் இலக்கண இலக்கிய பாடங்கள் கற்பிப்பதற்கு இச்சங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர். வகுப்பு வாரமொருமுறை நடக்கும், இடமும் காலமும் சேருபவர்களின் வசதிக்கேற்ப நிச்சயிக்கப்படும். சேர்ந்து படிப்பவர் ஒரு சிறு தொகைப் பணம் உதவிவரற்பாலர்.

இவ்வகுப்பிற் சேர்ந்து படிக்க விரும்புவோர் தங்கருத்தை அடியிற் கைபொப்பமிட்டிருப்பவருக்கு எழுதியறிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

தி. சதாசிவஐயர்,
யா, ஆ. தி. பா. சங்க காரியதரிசி.
யாழ்ப்பாணம்,
17—8—23.
(Mis. 377)

கடிதம்.

பிராமணோத்தமர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

ஐயன்மீர்!

இவ்விந்துசாதனத்தில் இந்து சகோதரன் எனக் கைச்சாத்திட்டு "சமய அசட்டை" என்னும் விஷயமாய் எழுதியிருந்ததை யான் கண்ணுற்றேன். முதலாவது சமயம் தளர்த்தோங்குவதற்குக் காரணர் யாவரென்பதை ஆராய்வாம். கிறிஸ்து சமயம் உன்னத நிலைமைக்கு வருவதற்கு அதன் குருமாரே காரணரா யிருக்கின்றனர். இந்து மதம் குன்றுவது அதன் சமயகுரவராகிய உங்களாலேயென்று இனிது புலப்படுகின்றது. ஐயன்மீர்! ஓதும் தொழிலுக்குரியவராகிய நீவிர் நும் கடமையைச் செய்கின்றீர்களா? தத்தமக்குரிய கோயிற் பூசை, அபிஷேகம், அரிச்சனை முதலிய வேலைகள் முடிந்தபின்னர் சுவாமி தரிசனஞ் செய்ய வந்த பல்லாயிரம் சனங்களுக்கு நீங்கள் ஏதும் பிரசங்கம், இன்றேல் நற்புத்தி எப்போதாவது செய்ததுண்டா? அல்லது இனிமேல் செய்வீர்களா? ஐயகோ! அந்தண சிகாமணிகளே, சற்றே விழியுங்கள். வரும்படி விஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருக்குமாப்போல் ஆத்மசம்பந்தமான சற்கருமத்திலும் ஊக்கமாயிருங்கள். கோயிலுக்கு வருபவர்களில் அனேகர் மார்க்கத்தைப்பற்றித் தெரியாமலிருக்கிறார்கள். அன்னாரின் ஞானக்கண்களைத் திறக்க உங்களுக்குச் சக்தியில்லையா? வேதியரே! "நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" அது போல நீங்கள் நாளுக்கு நாள் கொஞ்ச நேரம் செலவழித்து நற்புத்தி கூறிவாருங்கள். அவைகள் மூலமாய் மற்றும் சனங்களும் கடைத்தேறுவார்களென்பது திண்ணம். முதல் வருணத்தார் எல்லோரும் இப்படி யிருக்கிறார்களா என்று ஒரு ஆட்சேபம் நிகழக்கூடும். இலை மறை காய்போல் தம் வருணத்துக் கேற்ப ஒழுகுபவர்கள் சிலர் இருக்கின்றார்கள். ஆனதுபற்றி அப்படிப் பட்டவர்களை யான் விளித்துக் கூறவில்லையென்பதை நன்கு உணர்ந்துகொள்க. ஐயன்மீர், யான் உங்களைத் தூற்றும் நோக்கமாயல்ல; தத்தம் கடமைகளை உணரும்படியே இவ்வியாசத்தை எழுதலானேன். எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக.

வெள்ளவத்தை
25—8—1923.
இங்ஙனம்,
ஆ. மகாலிங்கம்பிள்ளை.

பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

NOTICE OF SALE.

விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 4861ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் ௧௯௨௨௵ ஆவணிமாசம் 16ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்குங் காணிகள் ௧௯௨௩ம்௵ புரட்டாதி௴ 15௳ சனிக்கிழமை பிற்பகல் 3மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பிற்பாடு கண்டியிலிருந்து காலஞ்சென்றுபோன ஆதிநாராயண கணேசஐயர் சண்முகநாதின ஐயரின் ஆதனம்:—

1. யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கிறை பெரியகடைத் தெரு கங்கா சத்திரத்திற்கும் மிட்டாயிக்கடைச் சந்திக்கும் இடையில் இருக்கும் "பிள்ளையான் வளவு" பர. நி. இலா. 7 குளி 8¼ கடைகளும் வீடும் கிணறும் செய்பயிரும மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு றேட்டும் கிருஷ்ணஐயர் கைம்பெண் முத்துலெட்சுமிஅம்மாவுக்குடைய ஆதனமும், வடக்கு முத்துலெட்சுமி அம்மாவுக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம், மேற்கு விடத்தல்தீவுப் பிள்ளையார் கோவிலுக்குடைய ஆதனம், தெற்கு ஐயாத்துரை ஐயர் கைம்பெண் யோகம்மாவுக்குடைய ஆதனம்.
2. ஷெயிறை "பிள்ளையான் வளவு" 5½ குளி இரண்டு கடைகளும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு றேட்டு, வடக்கு காலஞ்சென்றவருடைய ஆதனம், மேற்கு காலஞ்சென்றவருடைய பின்னுற் சொல்லப்படும் ஆதனம், தெற்கு காலஞ்சென்றவருடைய ஆதனம்.
3. ஷெயிறை "பிள்ளையான் வளவு" பர. நி. இலா. 7⅞ ஆனால் றேட்டுக்கு எடுக்கப்பட்ட நிலத்தை விட இப்போதிருக்கிறது பரப்பு 7 குளி 4¾ கடைகளும் வீடுகளும் கிணறும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு A. P. சபாரத்தின ஐயருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு மேற் சொல்லப்பட்ட காணி, மேற்கு விடத்தல்தீவுப் பிள்ளையார்கோவிலுக்குடைய ஆதனம், தெற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும் ஒழுங்கையும்.

தேவையானால் மேற்சொல்லப்பட்ட காணிகள் பிரித்துத் துண்டு துண்டாய் விற்கப்படும். கடைகளும் தனித்தனியே விற்கப்படும்.

டிஸ்திறிக்கோடு
யாழ்ப்பாணம்
20—8—1923.
க. சிவப்பிரகாசம்,
கொம்மிஷனர்.
(Mis. 378)

தேவாலய தரிசனம்.

சென்ற ஆடி௴ 25-ந் திகதியைக்கொண்ட இப்பத்திரிகைப்பிரசுரத்தில் 'உலகம் பலவிதம்' என்னுந் தலைப்பின்கீழ் ஆலய வழிபாட்டைப் பற்றி எழுதியவை வாசிக்குஞ் சிவநேயச் செல்வர்களுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தாலும் உண்மையே. தற்காலம் கோவிலுக்குப் போகிறவர்களில் அநேகர் அங்கு குறிப்பிட்டது போல் ஆலய வழிபாட்டுக்குப் போகிறவர்கள் போல் காணப்படவில்லை. அவர்கள் சட்டையிட்டுக்கொண்டும், கையிற் பிரம்பு தாங்கிக்கொண்டும் "Wristlet" என்று சொல்லப்படும் கடிகாரம் ஒன்று இடதுமணிக்கட்டில் ஏதோ மிருகத்தோலால் செய்த வாரினுற் கட்டிக்கொண்டும், தேவார திருவாசகங்களை ஓதிக்கொண்டு போகவேண்டியவர் வாயிதழ்களைக் குவித்து (Whistle) சீழ்க்கை யடித்துக்கொண்டும் போகிறார்கள். ஐயையோ! இவர்கள் குளிக்கப்போய்ச் சேறு பூசுபவர்போல் பாவத்தை ஈட்டிக்கொள்ளுகின்றார்களே. சமயாசாரியர் நால்வரும் ஆலய தரிசனஞ் செய்யு முறைமையையும் அதனால் அடையும் பயனையும் முன்மாதிரியாக நம்மவர்களுக்கு எடுத்துக் காட்டியும் இவர்கள் இவ்வகையாக இடருற வேண்டிய காரணம் ஏனோ! அநேகர் இம்முறையை அறியாமல் இடருறுகின்றார்கள். இன்னும் அநேகர் அறிந்தும் நவீனநாகரிகத் தலைப்பட்டு இவைகளைக் கைக்கொள்ளுகிறார்களில்லை. வேறு சிலர் தாங்கள் அணிந்திருக்கும் பெனியனை அகற்ற விருப்பமில்லாமல் கோவிலுக்குச் செல்லாது விடுகின்றார்கள். இவர் தாய்வயிற்றிலிருந்து பிறக்கும்பொழுதும் பெனியனுடன் பிறந்தவர் போலும். இதற்கெல்லாம் காரணம் நமக்கு இப்போது அரசினர் உதவுங்கல்வியும் கிறீஸ்து மத பாடசாலைகளில் "சமயக்கல்வி" என்ற நாமத்துடன் அருந்தும் இந்த சமய கண்டனமாகவுள்ள கல்வியுமேயாம்! இத்தகைய இடையூறுகளை யெல்லாம் கண்டும் கேட்டும் அறிந்தும் நம்மவர்கள் மௌனஞ்சாதிக்கின்றார்களே. இந்துசமய பரிபாலனத்தின் பொருட்டுச் சமயக்கல்வியை யூட்டியும், தேவாலய சேவை தேவாலய தரிசனம் விபூதி உருத்திராக்கம் இவைகளினுடைய மகிமையை எடுத்துப் பொதுஜனங்களுக்கு உரைத்தும் வருபவர் யார்? தற்காகாலம் ஒருவருமில்லையே. இத்துறையில் நாவலர்பெருமான் மிக உழைத்து வந்தார். தற்காலமோ அவரைப் பின்பற்றி அவருடைய போதனையை மடங்களிலும் கோயில்களிலும் வித்தியாலயங்களிலும் எடுத்துச் சொல்வதற்கு ஒருபோதகரும் இல்லையே. பெற்றார்களும் தங்கள் தங்களுடைய பிள்ளைகளின் நன்மையைக் கருதுகிறார்களில்லையே. சமயானுட்டானங்கள் எவ்விதம் இருந்தாலும் தங்களுடைய பிள்ளைகள் காலுக்குங் கைக்கும் உறைபோட்டு (coat & trousers) அற்பமோ அதிகமோ உழைக்கக்கூடியநிலைபரம் வந்துவிட்டாற் போதுமென்றே விரும்புகிறார்கள். அப்படி விரும்பியுமென்னை! சமய உணர்ச்சி யில்லாதபடியினால் அப்பிள்ளை தனக்கும் உபயோகமற்றதாய்ப்போவதுடன் தன்பெற்றாரையுங் கவனியாது அவருடைய கற்பனையை அவமதித்துவிடுகின்றது. சிவநேசம் இல்லாது வளர்க்கப்படும் பிள்ளையின் கதி இதுவே. யாழ்ப்பாணத்தில் அநேகசிவாலயங்கள், சைவவித்தியாசாலைகள், சைவகழகங்கள் இருக்கின்றனவே. இவைகள் தாம்தாம் தனித்து அல்லது ஒருமித்து இக்குறையைநீக்கமுன்வரக்கூடாதா? கோவிலதிகாரிகள் விழாக்காலங்களிற் பெருந்தொகைப்பணத்தை நாட்டியத்திலும் வாணவேடிக்கைகளிலும் இறைக்கின்றார்களே. அப்பணத்தைக்கொண்டு ஒரு போதகரை நியமித்து விழாக்காலங்களில் கோயிலுக்கு வரும் பொதுச் சனங்களுக்குப் போதிக்கலாமே. இவைகளெல்லாம் தூங்குகின்றனவா? இவைகளைத் தட்டியெழுப்புவதற்கு சிவநேயச்செல்வர்தாமும் முன்னுக்கு வாராதிருக்கலாமா? இவர்களுந் தூங்கிவிட்டார்களா? விழியுங்கள்! விழியுங்கள்!! ஒருங்கு சேர்ந்து இக்குறையை நிவிர்த்திசெய்ய முன்வாருங்கள்.

கொழும்பு,
ஆவணி 2.
சைவசமயி.

இவைதானா தற்கால நாகரீகம்?.

அனேக ஜனங்கள் இக்காலம் நாகரீக காலம் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். கற்றவர்களும், கல்வியற்றவர்களும் எந்த அர்த்தத்தில் நாகரீகம் என்ற சொல்லைப் பிரயோகிக்கிறார்களென்று தெரியவில்லை.

கூர்மையாக யோசிக்குமிடத்து, டம்பம், விதானங் கடந்த செலவு, குயுக்தி, பேராசை, பிறரைமதியாமை என்னு மிவைகட்குத்தான் இப்போது ஜனங்கள் நாகரீகமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். சில பெண்களுந் தாங்கள் ஆடவர்களைப்போல் ஊடாடுவதும், அவர்களுடன் சபைகளிலும் சங்கங்களிலும் வாதாடுவதும் நாகரீகமென்று எண்ணுகிறார்கள். ஸ்திரீகளுக்கு வீட்டுவேலை கொடுக்காமல் சயம்பாகிகளை ஏற்படுத்துவது நாகரீகமென நினைக்கிறார்கள். ஒருவன் செலவைச் சுருக்கினால் அவன் என்ன அநுபவத்தைக் கண்டானென்று ஜனங்கள் பழிக்கிறார்கள். இந்து தேசச் சரித்திரத்தில் மகம்மதுடோக்ளாக் என்பவன், தன் பற்களில் ஒன்று விழுந்ததற்காக விழுந்த பல்லைப் பல்லக்கிலேற்றி வாத்தியங்களோடும் பட்டாள விருதுகளோடும் நகர்வலஞ் செய்வித்து முடிவில் ஒரு கட்டடம் கட்டி அதை அடக்கஞ் செய்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வரசன் செய்தது போல நம்மவர்களும் நாகரீகம் பெருகப் பெருக விசேஷ செலவு செய்வர்போலும். ஒருவர் விசேஷமான பட்டம் பெற்றுவிட்டால் அவருக்கு உபசாரஞ் செய்வதில் அதிக செலவு செய்வதும் நாகரீகமென்று அபிப்பிராயம் பிறந்திருக்கிறது.

மட்டிற்குமிஞ்சிச் சமையல் செய்து கொட்டிச் சிந்துவதும் நாகரீகமாம். ஆகாரத்திற் காதாரமாயிருக்கும் நிலங்களை விற்றுவது ஆபரணங்கள் செய்தணிந்துகொள்கிறார்கள். விலையுயர்ந்த வஸ்திரங்களை வாங்குகிறார்கள். சந்ததி சந்ததியாக வந்த நிலங்களை விற்பதற்கு மனம் வராமல், உயர்ந்த வட்டிக்கு ஈடு வைத்துக் கடன்வாங்கிப் பின்பு வட்டி மேன்மேலும் கூடிவந்தபின் அநியாயமாக அவற்றை விற்கிறார்கள். ஆடையாபரணப் பெருமையாலும் டம்பமான செலவினாலும் நாகரீகங் கொண்டாடும் அறிவிலார் தங்களுக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் இழந்து தெருவில் நிற்கின்றார்கள். பெண்டாட்டியின் உறவினருக்கு உபசாரஞ் செய்வதும் உபகாரஞ்செய்வதும் நாகரீகமென்று நினைக்கும் சில மூடர்கள் பெற்றோர் உடன்பிறந்தோர் என்னும் இவர்கட்கு ஒருவேளை அன்னமிடத்தானும் மனமற்றுப்போகிறார்கள். சுபசோபன முகூர்த்தங்களில் சாதாரணமாயுள்ள புஷ்பமொட்டுகளைச் சூடுவது மேன்மையில்லையென்றும், பொன் வெள்ளியாற் செய்த மலரைச் சூடுவது நாகரீகமென்றும் நினைத்து அவ்வாறு பெருமுதல் அழிக்கிறார்கள்.

ஆடையாபரண நாகரீகம் கொண்டாடும் தற்கால ஜனங்கள் அடுத்த வீட்டிற் பிணங் கிடந்தாலும், பிணத்தை யெடுப்பதற்கு ஆளில்லாமல் தவித்தாலும், ஓர்வித சகாயமும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பிரேதத்தை வண்டியில் ஏற்றி ஆடு மாடுகளைப் புதைக்கும்வண்ணம் புதைக்கும்படி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த வீட்டில், கள்ளன் வந்து கொள்ளையிட்டாலும் ஏனென்று கேட்காமல் நமக்கென்னவென்று இருந்துவிடுகிறார்கள்.

ஆபரணம் செய்து போட்டால் மாத்திரம் அன்புவைத்தல், இல்லாவிட்டால் அலட்சியம் செய்தல், ஏழைகளை முகம் முறித்துப் பேசல், ஏழைகள் அந்நிய ஊரில் இருந்து வந்தாலும் வந்தாயாவென்று கேட்காதிருத்தல், முகம் கொடுத்துப் பேசாதிருத்தல், வரும்படி குறைந்த ஏழைகளிடம் போக்குவரவில்லாமலிருத்தல், தாழ்ந்த நிலையிலுள்ள பால்ய சிநேகிதர்களை மறத்தல், இவைகளும் நாகரீகமாக நினைக்கப்படுகின்றன.

சிலர் செபதபம் இல்லாமல், பிரபஞ்ச சுகமே சுகமென்று லாகிரிப் பதார்த்தங்களை நாகரீக சின்னமாகக் கைக்கொண்டு, பூர்வ ஆசாரங்களை நழுவவிட்டு, விபூதி முதலிய சமய சின்னங்களை அணிவது அநாகரீகமென்று நினைத்துத் தள்ளி, சாந்துப்பொட்டணிந்து, தர்மநிந்தை செய்து, பெரியோர் கைவிட்ட முறையெல்லாவற்றையும் சாவதானமாக அநுசரித்து, தெய்வபக்தியுள்ளவர்களைப் பரிகசித்து நாகரீகங் கொண்டாடுகிறார்கள்.

ஜனங்கள் எப்படி நடக்கிறார்களோ அதற்கு விபரீதமாக நடத்தல் நாகரீகமென்று நினைத்து, உட்காரும் பாயிலும் படுக்கைமீதும் எச்சிற் படிக்கம் வைத்துத் துப்புதல், பற்குத்தினால் கையலம்பாதிருத்தல், பற்கொண்டு நகங் கடித்தெறிதல், எப்போதும் எச்சில்பண்ணுதல், ஸ்நானம்பண்ணுமுன் ஆகார மருந்தல், உண்டென்பதற்கு இல்லையென்றும், இல்லையென்பதற்கு உண்டென்றும் நியாயம் பாராமல் வாதாடுதல், சுருட்டுப் பிடித்தல், தண்ணீர் வாய்வைத்துக் குடித்தல் முதலிய அநாசாரங்களைச் செய்கிறார்கள். வாக்கு மன மொன்றுபடாத செய்கை, மனம் ஒன்றுபடாத வார்த்தை இவைகளையும் நாகரீகமாய் நினைக்கிறார்கள். பெரியோர் முதியோர் என்ற மதிப்பின்றி, தாம் எல்லோரிலும் மேலென்று நிதானித்து, தானென்ற பிடிவாதம் எல்லாவற்றிலும் நிலைநாட்டி, தான் எவரையும் பணியாமல், தன்னை எல்லோரும் பணியவேண்டுமென்று நினைத்தல், தன்னைப் பணியாதவரைக் கெடுக்க முயலுதல், முற்காலத்துப் புலவர்களையும் அவர்கள் எழுதியவற்றையும் எடுத்தெறிந்துபேசல், பிறரைப் புண்படுத்திப் பேசல் இவைகளெல்லாம் நாகரீகமெனச் சிலர் எண்ணுகிறார்கள். சமயத்திற் கேற்றவாறு பொய் பேசி, மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலுங் காட்டி, பிள்ளையையுங் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பாலுக்குக் காவலும் பூனைக்குத் தோழனுமாக இருந்து, அகடவிகட சாமர்த்தியங் காட்டிப் பொருள் சம்பாதித்தல் நாகரீகமென நினைக்கிறார்கள். மேற்கண்ட இவைகள் நாகரீகத்தைச் சேர்ந்தனவன்று. உண்மையான நாகரீகம் இன்னதென்று அடுத்தமுறை சிந்திப்போம்.

க. தங்கரத்தினஅம்மாள்,
நல்லூர்.

பெண்கள் முன்னேற்றமும் பருத்தித்துறை நாதாவும்.

இந்துசாதனம் 11-ம் இலக்கப் (ஆவணி 9) பத்திரிகையில் நா. தா. ச. எழுதி வெளியிட்டிருக்குங் கடிதத்தில் மாது சிரோன்மணி ஸ்ரீமதி மங்களம்மாளின் கருத்தை யுள்ளவாறுணராதோ உணராததுபோல் நடித்தோ அவர்சொற்களிற் போலிக் குற்றஞ் சாட்டி மகிழ்வதை யாஞ் சிறிது கண்டிக்கப் புகுந்தனம்.

சபைகளிற் பெண்ணுமாணு மொரு விஷயத்தைக் குறித்து வாதாடுவதாற் கல்வியிற் சிறந்த பெண் கணவனைப் பேணாமல் விட்டுவிடுவாளோ? .... ஆண்களுக்குள் அடங்கி நடக்கவேண்டாமென்று யாருஞ்சொல்லவில்லையே.

அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டது தற்காலத்தில் மாத்திரமன்று. "ஒரியே மீனா வந்துணிமுந்தையோ, நாரியே கண்பிழை நாட்டிலில்லையோ, பாரிய கணவனைப் பழுது செய்து நீ, நீரிலேயிருப்பதிந்நிலைமையல்லவே" யென்றது தற்காலத்த தன்றென் றறியக் கடவர். பெண்கள் முகத்தில் முக்காடிட்டு மூடிக்கொண்டு வீட்டிற் றிரைக்குள்ளே முற்காலத்தில் வைக்கப்பட்டிருக்கவில்லை யென்றும், அவர் சுயாதீனம் சிற்சில சமயங்களில் விளங்கிக் கிடந்ததென்றும் பின் வருபனவற்றால் நாதா அறிந்தடங்குவாராக.

(1) வணங்காமுடிமாறன் மனைவி தன் புருஷன் அலட்சியம்பண்ணிய பொய்யாமொழிப் புலவரது சிவிகையை ஆண்வேடங்கொண்டு தாங்கினது.

(2) நெடுமாறன் சமணசமயமாக, மனைவி மங்கையர்க்கரசியும் மந்திரி குலச் சிறையும் சைவ மனுட்டித்தது.

(3) தமிழறியும் பெருமான் நக்கீரருடன் சமவாதஞ் செய்தது.

(4) திருப்பரங்குன்றிற் றெய்வயானையம்மை திருமணத்துக்கு ஆடவரும் மங்கையரும் சென்றவகையைக் கந்தபுராணம் மூலமாக அறிக. ஆண்களோடு கூடித் திரிதல் இக்கால வழக்கன்று; முற்கால வழக்கேயென்பது பின் வருங் கந்தபுராணச் செய்யுள்களாற் பெறப்படும்.

ஏரகன் மணந்தனக் கெய்து மாசையால்
வாரக முலையுடை மடந்தை யார்பலர்
பாரக மலிதரப் பரவிப் போயினர்
தாரகை விண்ணெறி படருந் தன்மைபோல்.

இடையிடை கால்களும் யாதுஞ் சேர்தலிற்
படிமிசை நடந்திடு பாவை மார்களை
விடலைக ளேந்தியே மெல்ல வேகினர்
கடலினும் பெரியதாங் காம மூழ்குவார்.

தந்திக ளின்மிசைத் தைய லாருடன்
மைந்தர்க ளேகினர் மானி லந்தனி
லந்தமில் சிரயி ராணி தன்னொடு
மிந்திரர் போவதோ ரியற்கை போலவே.

கல்விக்கு முதல்வி சரஸ்வதி, செல்வத்துக்கு முதல்வி இலக்குமி, யுத்தத்திற்கு முதல்வி துர்க்கை யென்பதையுங் கடிதர் அறிவாராக.

சுவதேசக் கிளர்ச்சியை மாது ஸ்ரீ மங்களம்மாள் ஸ்ரீமதி. சரோஜினிநாயுடுவைப்போல் இத்தேசத்திற் செய்திருப்பதை யார்தான் மறுப்பார்.

கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.
விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றோரோ டேனை யவர்.
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின.

குஞ்சியழகுங் கொடுந்தானைக்கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல..............கல்வியழகே
யழகு. —நாலடியார்.

ஒத்தகல்விமுதலியன தலைவனுக்குந் தலைவிக்கும் வேண்டுவது. —இறையனாரகப்பொருள்.

ஈசனைப்படி தாசனுமப்படி யென்பது பிற தேசத்தார் கூற்று.

21-8-23. க. சிவக்கொழுந்து.

[இக்கடிதத்தில் விஷயத்தோடு அதிக தொடர்பில்லாத சில வாக்கியங்களைத் தவிர்த்துள்ளேம். —பத்திராசிரியர்].

தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16.) தொண்டமானாறு.

சருவஞானோத்தர ஆகமம்.

ஞானபாதம் தமிழ் மூலமும் முத்திரத்ந விருத்தியும்.

இது ஸ்ரீகண்டபரமேசுவரரால் ஸ்ரீசுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பெற்றது. சைவசித்தாந்த சாரமாயுள்ளது. விருத்தியில் பல அரும்பெரும் விஷயங்கள் விளங்கும். வடமொழி மூலமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. நயம் கிளேஸ் காகிதத்தில் பக்கம் 200 வரையுள்ளது. வேண்டுவோர் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா **1—8—0.**

தபால் சார்ஜ் வேறு.

ஒரே முறையில் ஐந்து புத்தகம் வாங்குவோர்க்கு ஒரு புத்தகம் சேர்த்துக் கொடுக்கப்பெறும்.

இங்ஙனம்,
☞ **பொ முத்தையபிள்ளை,**
சிவாகம சங்கம்,
(H. 20) தேவகோட்டை.

ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

(Standard Tiles.)

இவை வேரேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற
மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில்
கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேஹவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

மூலத்திற்கு
குருநாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; மூளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

இருமலுக்கு
குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவுநாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மெடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்தலேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசிந்தூரம், சாம்பிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்த காமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறுத்தலுக்கு ரூபா ௧0. கால்றுத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
ஆரப்பத்தை,
காத்தான்குடி போஸ்டு,
M. 1.) மட்டக்களப்பு.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.